In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| M.C.O.P.No.101/2020 | Deposition of Witness: RW.1 |
| Name: Santhana Bharathi | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 21.01.2026.

முதல் விசாரணை :

எனக்கு நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். நான் திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணியாற்றி வருகிறேன். என்னை இவ்வழக்கில் சாட்சியம் சொல்ல அனுமதித்து எனது உயர் அதிகாரி சாட்சியம் அளிக்க என்னை பணித்து எனக்கு அனுமதி அளித்துள்ளார். அந்த அனுமதி கடிதம் எமசாஆ.1 ஆக குறியிடப்படுகிறது. விபத்து வாகனத்தின் ஓட்டுநர் சசிக்குமார் என்பவருக்கு பயணிகள் வாகனத்தை ஓட்டுவதற்கு உரிமமோ, பேட்ஜோ எங்கள் அலுவலகத்திலிருந்து வழங்கப்படவில்லை. விபத்து தேதியில் மகேந்திரா மேக்ஸ் என்ற பயணிகள் வாகனத்தை சசிக்குமார் ஓட்டியது சட்டப்படி தவறு. விபத்து வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையில் ஓட்டுநருக்கு பேட்ஜ் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்தில் இறந்துபோன ராமசாமி என்பவருக்கும் எங்கள் அலுவலகத்தில் இருந்து ஓட்டுநர் உரிமம் எதுவும் வழங்கப்படவில்லை. சசிக்குமாரின் ஓட்டுநர் உரிமத்தில் எக்ஸ்ட்ராக்ட் நகல் எமசாஆ.2. விபத்து வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை நகல் எமசாஆ.3.

மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை–

எமசாஆ.3 ன்படி சசிக்குமாருக்கு இலகுரக வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் உள்ளது என்றால் சரிதான். TN–59–M–0699 என்ற வாகனம் இலகுரக வாகனம் என்றால் சரிதான். மேற்படி வாகனம் 7500 க்கும் குறைவான எடையுள்ளது

என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை ஓட்டுவதற்கு வில்லை (பேட்ஜ்) தேவையில்லை, ஓட்டுநர் உரிமம் மட்டும் போதுமானது என்றால் சரியல்ல. ராமசாமி என்பவர் வேறு ஒரு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உரிமம் எதுவும் பெற்றிருந்தால் அது எங்கள் அலுவலகத்திற்கு தெரியாது என்றால் சரியல்ல. அதனால் ராமசாமிக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என என்னால் உறுதியாக சொல்லமுடியாது என்றால் சரிதான்.

மறு விசாரணை –இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.01.21 18:09:43 +0530

Principal District Judge,
Dindigul.